'முத்து நகரம்' தூத்துக்குடி இப்போது 'கொலை நகரம்' ஆகிவிட்டது!

காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்தவரிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்!

முதலமைச்சர் விஜய்க்கு - கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, அக். 30 -

"முதல்வர் விஜய், மக்கள் மீது கருணை காட்டி, காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்த ஒருவரிடம் அதன் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்!" என, வலைதளப் பதிவொன்றில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தை அடுத்த வில்லி குடியிருப்பு பகுதியை சேர்ந்த வேல்முருகன் என்பவர், அக்டோபர் 22ம் தேதி கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார். அக்டோபர் 23ம் தேதி சாத்தான்குளம் அருகே உள்ள முத லூர் கிராமத்தில் மேரி ரெஜிலா என்ப வர் வீடு புகுந்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அதே நாளில், தூத்துக் குடி திரேஸ்புரம் அருகே மீனவர் பழனி என்பவரை செந்தில் என்ற மீன வர் மது குடிக்கும் போது ஏற்பட்ட தகரா றில் கத்தியால் குத்தி கொலை செய் தார்.

அக்டோபர் 24ஆம் தேதி சாத்தான் குளம் அருகே உள்ள பண்ணம் பாறை கிராமத்தில் இடப்பிரச்சனை யில் ஏற்பட்ட தகராறில் கொம்பையா என்ற விவசாயியை அதே பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் என்ற விவசாயி கல்லால் அடித்து படுகொலை செய் தார். அக்டோபர் 25ஆம் தேதி, ஏரல் பகுதியைச் சேர்ந்த தனுஷ்கோடி என்ற லாரி ஓட்டுனர், தனது மகளை கேலி செய்தவர்களை தட்டிக்கேட்கச் சென்ற



போது அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்க ளால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

அக்டோபர் 26ஆம் தேதி திருவை குண்டம் அருகே உள்ள ஆழ்வார் கற் குளம் கிராமத்தில் இடப்பிரச்சினை யில் கல்லூரி மாணவர் இசக்கி ராஜா வெட்டிக் கொல்லப்பட்டார்.

அக்டோபர் 27ஆம் தேதி கோவில் பட்டியில் கூலித் தொழிலாளிகளான காளிராஜ் மற்றும் சின்னத்துரை ஆகி யோரிடையே ஏற்பட்ட தகராறில், சின் னத்துரை கோடாரியால் தாக்கியதில் காளிராஜ் காலமானார்.

அக்டோபர் 28ஆம் தேதி தூத்துக் குடி கந்தன் காலனி பகுதியில் தனி யாக இருந்த சசிகலா என்ற பெண்ணை அவரின் உறவினர் ஒரு வர் நகைக்காக படுகொலை செய்தார். தற்போது, சாத்தான்குளத்தை முதலூ ரில், வீடு புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவத்தில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முத்துகிருஷ்ணனும் உயிரிழந்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு வாரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு தூத்துக்குடி மாவட்டத் தில் தொடர் கொலைகள் இந்த த.வெ.க. ஆட்சியில் அன்றாட நிகழ்வு களானது கண்டு கொதித்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம். பி. அவர்கள் விடுத்த வலை தளப் பதிவு வருமாறு :-

நேற்றைய தினம் தூத்துக்குடி கந்தன் காலனியில், வீட்டில் தனியாக இருந்த சசிகலா என்ற பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நான்கு நாட்களில் ஏழு கொலைகள் எனத் தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, மக்கள் அச்சத் தில் உறைந்துள்ளனர்.

'முத்துநகரம்' என்று அழைக்கப்ப டும் தூத்துக்குடியை, 'கொலை நகரம்' என்று அழைக்கும் நிலைக்குக் கொண்டு செல்கிறது த.வெ.க. அரசு. மீண்டும் சொல்கிறேன்... முதலமைச்சர் விஜய் அவர்கள் மக்கள் மீது கருணை காட்டி, காவல்துறையை நிர்வகிக்கத் தெரிந்த ஒருவரிடம் அதன் பொறுப்பை ஒப்ப டைக்க வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.







காஞ்சிபுரம் மாநகராட்சியில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு மின்மை விலைவாசி உயர்வை கண்டித்து நடைபெறவிருக்கும் கண்டன ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக செயற்குழு கூட்டம் மாநகர அவை தலைவர் கே.ஏ.செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநில வர்த்தக அணி வி.எஸ்.ராமகிருஷ்ணன், மேயர் திருமதி.மகாலட்சுமி, யுவராஜ், ஒன்றிய செயலாளர் பி.எம்.பாபு, ஆர்.கே.தேவேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். அ.யுவராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆ.செல்வி, பகுதி செயலாளர்கள். எஸ்.சந்துரு கே. திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், கே.சுப்பராயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வைக் கண்டித்து

விழுப்புரத்தில் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், அக்.30-

விழுப்புரம் மத்தியம், தெற்கு, வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் நாளை (31.10.2026-சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அரு கில், நகராட்சி திடலில் த.வெ.க அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண்கள் - குழந்தை கள் பாது காப்பின்மை மற்றும் விலை வாசி உயர்வை கண்டித்து மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் மத்திய மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் A.G.செல்வி தலைமையில் நடைபெறுகிறது . விழுப்புரம் தெற்கு மாவட்ட மகளிர் அமைப் பாளர் K.அமுதா வரவேற்புரை யாற்றுகிறார், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி



அமைப்பாளர்கள், ஒன்றிய, மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கள் , துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும், மாநில மக ளிர் அணி பிரச்சாரக்குழு செயலா ளர் M.தேன்மொழி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்க லிங்கம் ஆகியோர் கண் டன உரையும், விழுப்புரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வி.திலகவதி நன் றிவுரையாற்ற உள்ளார்கள்.

இக்கண்டன ஆர்பாட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்ட மக ளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் நகர, ஒன்றிய, பேரூர் கழக முன் னாள், இந்நாள் தலைவர்கள், துணைத்தலைவர்கள், முன் னாள் மாவட்ட கவுன்சிலர்கள், நகர, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் வெல் லும் தமிழ்ப்பெண்கள் ஆகி யோர் கலந்துக் கொண்டு மாபெ ரும் கண்டன ஆர்பாட்டம் நடக்க உள்ளது, அது சமயம் மாநில / மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன் றிய மற்றும் பேரூர் கழக செயலா ள ர் க ள் / த லை வ ர் க ள் / நிர்வாகிகள், தலைமை செயற் குழு மற்றும் பொதுக்குழு உறுப் பினர்கள், மாவட்ட சார்பு அணிக ளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கிளை நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர். இரா. இலட்சுமணன் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில்

31.10.2026 (நாளை) சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை மேற்கு - சென்னை தெற்கு - தென்மேற்கு மாவட்ட

மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி கூட்டறிக்கை!

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கெட்டு இருப்பது, பெண்களுக்கு எதிரான வன்முறை குழந்தைகள் கடத்தல், த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து சேப்பாக்கம், சுவாமி சிவானந்தா சாலையில் சென்னை மேற்கு - சென்னை தெற்கு - தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 31.10.2026 - சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறுகிறது. இது குறித்த அறிக்கை வருமாறு:-

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கெட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் த.வெ.க.வினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசை கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு - சென்னை தெற்கு - சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியின் சார்பில் நாளை 31.10.2026 - சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சென்னை - சேப்பாக்கம் சுவாமி சிவானந்தா சாலையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை தென்மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி மாவட்ட தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மகளிர் அணி தொண்டர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென அறிக்கை விடுத்துள்ளனர்.

சென்னை மேற்கு - சென்னை தெற்கு - சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி

த.வெ.க.அரசைக் கண்டித்து விழுப்புரத்தில்

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் – முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, அக். 30-


த.வெ.க.அரசைக் கண்டித்து விழுப்புரத்தில் திமுக மகளிர் அணி சார்பில் நாளைமாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறு கிறது இதில்விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி, மக ளிர் தொண்டரணியினர் திரளாக பங்கேற்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செய லாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வேண்டுகோள் விடுத்துள்ளார் .

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கையில்கூறுகையில்:

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர் கெட்டு இருப்பதோடு, குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகி யவை மிகப்பெரிய அளவில் அதி கரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக ஆக்கி உள்ளது.

இதுபோன்ற குற்றச் செயல்க ளில் ஆளும்

த. வெ.க.வினரே பெரிய அள வில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த அரசு சட் டம் ஒழுங்கை பாதுகாக்கத் தவறிய தோடு, பெண்கள் மற்றும் குழந் தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், சிறைச்சாலை கைதிகள் தப்பி ஓடுவதை தடுக்க வும், விலைவாசி உயர்வை கட்டுப் படுத்தவும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.த. வெ . க அரசே ஆவின்பால் மற்றும் ஆவின் உப பொருட்களின் விலையை உயர்த்துகிறது.ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ கத்தை படுகுழியில்தள்ளி உள்ள தமிழக வெற்றி கழக அரசை கண் டித்து திமுக மகளிர் அணி சார்பில் நாளை 31. 10 .2026 சனிக்கி முமை காலை 10 மணி அளவில் அனைத்து மாவட்ட தலைநகரங்க ளிலும் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறும் என கழக தலைவர் மு .க .ஸ்டாலின் அவர்



கள் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் திமுக தலை மைக் கழக ஆணைக்கிணங்க த. வெ.க.அரசை கண்டித்து விழுப் புரம் வடக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் நாளை 31ஆம் தேதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நாளை நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள் வது "நமது உரிமை நமது கடமை "என்ற லட்சிய உணர்வோடு விழுப் புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம், திண்டிவனம் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,அனைத்து அணி அமைப்பாளர்கள், அனைத் துஅணிகளின் பொறுப்புகளில் உள்ள மகளிர்கள்,கழக மூத்த நிர் வாகிகள், முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், துணை பெரும் தலைவர்கள் , மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன் றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும்உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள்என ஒட்டு மொத்த கழகத்தினரும் ஆயி ரம் கணக்கில் அலைகட என திரண்டு வந்துகண்டன ஆர்ப்பாட் டத்தில் பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு கேட்டுக்கொள்ளப்ப டுவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.



வேலூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஞானசேகரன், அமுலு மற்றும் மகளிரணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.